06.11.2024

**கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.**

**அமர்வு வழக்கு எண். 205 /2018**

அ.சா.26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எம். புவனேஷ்வரி | | |
| க/பெ | ஜெயவேல் | | |
| **கிராமம்** | கவுண்டனூர் | **தொழில்** | |
| **தாலுக்கா** | போச்சம்பள்ளி | **வயது** | 32/2024 |
| **மாவட்டம்** | கிருஷ்ணகிரி | **தேதி** | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** வீட்டில் குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ஜெயவேல் என் கணவர் ஆவார். கடந்த 07.02.2011 ம் தேதியில் எனக்கும் ஜெயவேல் என்பவருக்கும் திருமணம் ஆனது. 30.04.2013 தேதியில் ஒரு மகன் பிறந்தான். என் கணவர் இறப்பதற்கு முன்பு 8 வருடங்களாக விழுப்புரம் இரயில்வே நிலையத்தில் இரயிலில் கதை புத்தகங்களை விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தார். 05.04.2014 அன்று இரயில்வே போலீசார் என் கணவரை திடீரென விசாரணைக்கு கூப்பிட்டார்கள் . அப்போது மதியம் 03.00 மணி இருக்கும். அப்போது போலீசார் என் கணவரிடம் மாமூல் கேட்டார்களாம். அதை கேட்டு அவர் கொடுக்க முடியவில்லை என்று சொன்னாராம். அதனால் அவரை விசாரணைக்கு என்று கூட்டிச்சென்று விழுப்புரம் பக்கத்தில் உள்ள கோலியனூர் கிராமத்தில் உள்ள ஒரு கரும்பு காட்டில் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்று அடித்துள்ளார்கள். அதன் பிறகு அவர் வீட்டிற்கு வந்தார். அப்போது கேட்டதற்கு அவர் என்னிடம் இப்படியெல்லாம் நடந்தது என்று

சொன்னார். நான் அவரிடம் அவரது உயர் அதிகாரிகளிடம் முறையிட வேண்டியது தானே என்று கேட்டேன். அதற்கு என் கணவர் அவர்களை பகைத்துக் கொண்டால் நம்மால் வேலை செய்ய முடியாது என சொன்னார். நான் அவரிடம் எதற்காக இந்த வேலையை செய்கிறீர்கள் நம் ஊருக்கே வந்து விடுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் கொஞ்ச நாள் போகட்டும் என்று சொன்னார். கடந்த 29.04.2014 ம் தேதி என் பையன் பிறந்த நாளுக்கு என் கணவர் என் ஊருக்கு வந்தார். பிறகு 30 ம் தேதி திரும்பி வந்துவிட்டார். 06.05.2014 அன்று காலை 06.15 மணிக்கு அவர் என்னை தொடர்பு கொண்டு எப்போதும் போல பேசினார். மீண்டும் அன்று காலை 10.00 மணிக்கு நான் போன் செய்தேன் . போனை எடுக்கவில்லை. மீண்டும் மதியமும், மறுநாள் காலையிலும் போன் ரிங் ஆகியும் எடுக்கவில்லை. அதன் பிறகு போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது என்று வந்தது. 7 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு மத்தூர் காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் வந்தது. அதில் என் கணவர் வழிப்பறி செய்யும் போது அவரை பொதுமக்கள் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றும், அப்போது அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் போகவே அவரை விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், மருத்துவமனையில் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் வந்ததாக கூறினார்கள். நான் என் அம்மா, அப்பா மற்றும் உறவினர் ஆகியோர்களுக்கு தகவல் சொல்லி மறுநாள் 8 ம் தேதி கிளம்பி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு என் கணவரின் உடலை அடையாளம் காட்ட சொன்னார்கள். என் அப்பா அடையாளம் காட்டினார். அதன் பிறகு தான் என் கணவர் 28.04.2014 தேதியில் முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பி உள்ளார் என்று எனக்கு தெரிய வந்தது. மேலும் அந்த கடிதத்தை என் கணவரின் நண்பர் பாஸ்கர்

என்பவர் மூலம் தான் அனுப்பினார் என்று தெரியவந்தது. அதன் பிறகு என் கணவரின் உடலை பிரேத பரிசோதனை செய்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். நாங்கள் பிரேதத்தை ஊருக்கு எடுத்து சென்று முறையாக அடக்கம் செய்தோம். என் கணவர் இறந்ததற்காக தமிழ்நாடு அரசில் இருந்து முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து ரூ. 5,00,000/- இழப்பீடாக வழங்கினார்கள். தற்போது சாட்சி 05.04.2014 தேதியில் தனது கணவரை கரும்பு காட்டில் வைத்து காவல் ஆய்வாளர் வாசுதேவன், அவரது ஓட்டுனர் திருக்குமரன் மற்றும் 3 பேர் பெயர் தெரியவில்லை அவர்கள் அடித்ததாக சொன்னார். இது சம்மந்தமாக என்னை விழுப்புரம் சிபிசிஐடி போலீசார் விசாரித்தார்கள். மனித உரிமை ஆணையம் வீட்டிற்கே வந்து விசாரித்தார்கள். சம்பவத்திற்கு 2, 3 மாதம் கழித்து விழுப்புரத்திற்கு வந்ததாக ஞாபகம் உள்ளது. அங்கு நீதிமன்றத்தில் ஏதாவது வாக்குமூலம் சொல்லி கையெழுத்து போட்டேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**என் கணவர் இரயிலில் மற்றும் இரயில் நிலையத்தில் 8 ஆண்டுகாலம் புத்தகம் விற்றதற்காக இரயில்வே அதிகாரிகளிடம் எந்தவிதமான ஆதாரமும் பெற வில்லை என்றால் சரிதான். ஓடும் இரயிலில் பயணம் செய்வதற்கு எந்த டிக்கெட்டோ அல்லது இரயிலில் புத்தகம் விற்றதற்கோ எந்தவிதமான உரிமமும் இல்லை என்றால் சரிதான். மாதம் ஒரு முறை அவர் என் ஊருக்கு வந்து வருவார். 05.04.2014 க்கு முன்பு என் கணவர் எப்போது ஊருக்கு வந்தார் என்றால் தோராயமாக சுமார் 10 நாட்களுக்கு முன்பு வந்து இருப்பார். அதன் பிறகு என் குழந்தையின் பிறந்தநாளுக்கு முன்பு தேர்தலுக்காக என் கணவர் ஊருக்கு வந்தார். 05.04.2014 ல் இருந்து தேர்தல் எப்போது**

நடந்தது என்றால் சுமார் 10 நாட்கள் கழித்து நடந்து இருக்கலாம். அப்போது தான் கோலியனூருக்கு அழைத்துச் சென்றார்கள் என்ற விவரத்தை முதன் முறை என் கணவர் சொன்னார் என்றால் அவர் அடிபட்ட உடன் ஊருக்கு வந்தார். அடிபட்ட உடனே அவர் எனது வீட்டிற்கு வந்தார் என்று நான் காவல் துறை விசாரணையிலோ, நீதித்துறை நடுவர் வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 05.04.2014 தேதியில் என் கணவரை போலீசார் அழைத்துச் சென்றார்கள் என்ற விவரத்தை நான் காவல் துறை வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது சாட்சி நீதிமன்ற விசாரணை வாக்குமூலத்தை படித்து இல்லை என்று தெரிவிக்கிறார். கோலீயனூருக்கு என் கணவரை எதிரிகள் அழைத்துச் சென்றதாக நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னிடம் மத்தூர் காவல் நிலையத்தினர் என் கணவர் விழுப்புரம் இரயில்வே நிலையத்தில் பிக்பாக்கெட் அடித்ததால் அவரை பொதுமக்கள் துரத்தியபோது கீழே விழுந்து ஓடியவரை பொதுமக்கள் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக தகவல் தெரிவித்தனர் என்றால் சரிதான். இழப்பீடு
ரூ. 5,00,000/- வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். இந்த இழப்பீடு வாங்கவேண்டும் என்பதற்காக காவல் துறையினர் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் நான் இப்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் என்னை மூன்று மாதத்திற்கு பிறகுதான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

<u>3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மத்தூர் போலீசார் எனக்கு 7 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு என் கணவர் இறப்பு குறித்து தகவல் கொடுத்தார்கள். நான் மத்தூர் காவல் நிலையம் போகவில்லை. 8 ம்

தேதி காலையில் நான் நேரடியாக மருத்துவமனை சென்றேன். மருத்துவமனைக்கு சென்ற பிறகு என்னை இந்த வழக்கு சம்மந்தமாக வேறு காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் தெரியவில்லை. நான் மருத்துவமனையில் வாக்குமூலம் கொடுத்தேன். அப்போது என்னுடன் அப்பா இருந்தார். நான் நீதிமன்றத்தில் என் கணவரின் பிரேதத்தை பார்த்த பிறகு தான் வாக்குமூலம் கொடுத்தேன். அதன் பிறகு என்னை சிபிசிஐடி போலீசார் எங்கே வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. சிபிசிஐடி போலீசார் விசாரிக்கும் போது என் செல்போன் எண்ணையும் சொல்லியுள்ளேன். என் கணவரின் செல்போன் எண்ணையும் சொல்லியுள்ளேன். என் கணவரிடம் நான் தினமும் 3 அல்லது 4 முறை தொலைபேசியில் பேசுவேன். அப்போது அவர் என்னிடம் அன்றாட நிகழ்வுகளை என்னிடம் சொல்வார். சிபிசிஐடி போலீசார் விசாரிக்கும் போது நான் என்னை விசாரித்ததாகவோ என் கணவர் உடலில் காயம் இருந்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். 05.04.2014 தேதிக்கு பிறகு 29.04.2014 தேதி வரையில் என் கணவர் தாக்கப்பட்டதை குறித்து என்னிடம் சொன்னதாக சிபிசிஐடி போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. 29.03.2014 தேதியில் தான் தமிழ்நாடு முழுவதும் ஒரே சமயத்தில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அந்த தேர்தலில் ஓட்டு போட்டேன். 24.04.2014 தேதியில் தான் தமிழ்நாட்டில் தேர்தல் நடந்தது என்றால் சரிதான். என் கணவருக்கு என் ஊரில் ஓட்டு உள்ளது. அவர் ஓட்டு போட்டாரா என்றால் ஓட்டு போட்டார். என் கணவர் ஓட்டு போட 23 ம் தேதி வந்தார். வந்தவர் மகன் பிறந்தநாள் வருகிறது என்று ஒரு வாரம் தங்கிவிட்டார் என்றால் இல்லை. உடனே

கிளம்பிவிட்டார். திருமணம் ஆன பிறகு நான் எனது தந்தை வீட்டில் இருந்தேன். 29.03.2014 தேதியில் தேர்தல் அறிவிக்கப்பட்டதால், தேர்தலை கண்காணிப்பதற்காகவும் பாதுகாப்பை கண்காணிப்பதற்காகவும் அந்தந்த காவல் துறை காவலர்கள் பணி நிமித்தமாக வெளியே சென்று விட்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் என் கணவரிடம் எதிரிகள் மாமூல் கேட்டதாக தற்போது வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 05.04.2014 தேதியில் இரயில்வே காவலர்கள் அனைவரும் பாதுகாப்பு பணியில் தான் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இரயில்வே நிலையத்தில் இரயிலில் புத்தகம் விற்பதை இரயில்வே கண்காணிப்பு காவல் துறையினர் தான் கட்டுப்படுத்துவார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் 08.05.2014 தேதியில் தற்போது அளித்த வாக்குமூலத்தை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சிபிசிஐடி போலீசார் விசாரிக்கும்போதும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரித்த போதும் சொல்லாத விஷயங்களை தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாஸ்கர் என்பவருடன் சேர்ந்து என் கணவர் சில தவறான செயல்களை அந்த இரயில்வே இருப்புப்பாதை காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செய்திருக்கிறார்கள் என்றும் அதை இரயில்வே போலீசார் பலமுறை வழக்கு போடாமல் கண்டித்து இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. பலமுறை என் கணவர் டிக்கெட் இல்லாமல் இரயிலில் சென்று அந்த விவரம் தெரிந்தவுடன் அவர்கள் இறக்கி அனுப்பியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார்கள் மீது பொய்யான புகாரை அனுப்பினால் அவர்கள் நம் வழிக்கு வரமாட்டார்கள் என்று எனது கணவர் பொய் புகாரை அனுப்பினார் என்றால்

சரியல்ல. நான் என் கணவர் இறந்தபிறகு கேள்விப்பட்ட தகவல்களை நீதித்துறை நடுவரிடம் சொல்லாத தகவல்களை தற்போது இந்த நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் மத்தூர் காவல் நிலையத்தினர் என்னிடம் என்ன சொன்னார்களோ அதுதான் நடந்தது என்றால் சரியல்ல. நான் பாஸ்கர் சொல்லிக்கொடுத்ததை வைத்து சிபிசிஐடி போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை 2 ம் எதிரி தரப்பில் தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4, 5 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை